செ.வெ.எண்.294 நாள்.05.04.2018.

**திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து NEET தேர்வு எழுத எர்ணாகுளம் செல்லும் மாணவர்களுக்கு சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்து, மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்து தெரிவித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரைகளை வழங்கி, வழியனுப்பி வைத்தார்.**

-------

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து NEET தேர்வு எழுத எர்ணாகுளம் செல்லும் மாணவர்களுக்கு திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்தும், மாணவ, மாணவியர்களை தேர்வில் வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.04.2018) அறிவுரைகளை வழங்கி, வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை முன்னிலை வகித்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் நாளை NEET தேர்வு 10 மையங்களில் Palayamkottai Angelo மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 300 மாணவ, மாணவிகளும், Aupet Chinmaya மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 300 மாணவ, மாணவிகளும், Pushpalatha மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 480 மாணவ, மாணவிகளும், St.Johns மேல்நிலைப்பள்ளியில் 600 மாணவ, மாணவிகளும், Pushpalatha CBSE பள்ளியில் 600 மாணவ, மாணவிகளும், V.M.சத்திரம் Rosemery CBSE பள்ளியில் 300 மாணவ, மாணவிகளும், St.Antony Public School 360 மாணவ, மாணவிகளும், Vannarpettai FX மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 600 மாணவ, மாணவிகளும், Sankarnagar Sri Jeyandra Saraswathi Golden silver Jublie பள்ளியில் 420 மாணவ, மாணவிகளும், திருநெல்வேலி சாஃப்டர் மேல்நிலைப்பள்ளியில் 420 மாணவ, மாணவிகளும் தேர்வு எழுது உள்ளனர். ஆக மொத்தம் 10 மையங்களில் 4380 மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுத உள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, வெளி மாநிலங்களில் NEET தேர்வு எழுத செல்லும் மாணவ, மாணவிகளுக்கு தேவையான உதவிகளை பள்ளிக்கல்வித் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதனை தேர்வு எழுத செல்லும் மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து NEET தேர்வு எழுத எர்ணாகுளம் செல்லும் மாணவர்களுக்கு திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, புதிய பேருந்து நிலையத்திலிருந்து 8 சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பகலில் 7.30, 8.30, 9.00 ஆகிய நேரங்களிலும், இரவு 8.05, 8.30, 8.45, 9.00, 10.05 ஆகிய நேரங்களில் அரசு விரைவு பேருந்து போக்குவரத்து கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு பேருந்து போக்குவரத்துக் கழகம் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து ஆழுபுலா செல்லும் பேருந்துகள் எர்ணாகுளம் வரை செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் NEET தேர்வு நடைபெறும் மையங்களில் தண்ணீர், தடையின்றி மின்சாரம், கழிப்பறை உள்ளிட்ட தேவையான அடிப்படை வசதிகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், நாளை நடைபெறவுள்ள தேர்வு மையங்களுக்கு செல்ல சிறப்பு பேருந்துகளில் பிற மாவட்டத்திலிருந்து தேர்வு எழுத வரும் மாணவ, மாணவியர்களுக்கு தேர்வு மையங்களுக்கு செல்லவும், பிற மாநிலங்களுக்கு தேர்வு எழுத செல்லும், மாணவ, மாணவியர்கள் சிரமம் இன்றி சென்று வருவதற்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திடும் வகையில் புதிய பேருந்து நிலையத்தில் சிறப்பு வழிகாட்டி அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. தேர்வு எழுத செல்லும் மாணவ, மாணவியர்கள் தங்களது பெற்றோர்களுடன் சென்று தேர்வு எழுத உள்ளனர். மாணவ, மாணவியர்கள் NEET தேர்வினை நல்ல முறையில் தேர்வு எழுதி, வெற்றி பெறுமாறு வாழ்த்துகிறேன். மேலும், NEET தேர்வில்

அதிகளவில் வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கும், தங்களது பெற்றோர்களுக்கும் பெறுமை சேர்த்திட வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.பாலா, அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு.மோனி, வணிக மேலாளர் திரு.சுப்பிரமணியன், கிளை மேலாளர்கள் திரு.சங்கரநாராயணன், கூல்ராஜ், திரு.சிவகுமார், முக்கிய பிரமுகர் திரு.தவசிமுத்து மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு :செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.